## மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 01**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜூலை – 2025 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 02**

வடலூர் நகராட்சி, இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.488/2023/இ1, நாள்.05.06.2023ன் மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட் டவார்டு எண்.1, பூசாலிக்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மைய சமையற்கூடத்திலிருந்து உணவுகள் தயார் செய்து இந்நகராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரைபயிலும் மாணவ/மாணவியர்கள் மற்றும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மொத்தம் 1046 நபர்களுக்கு தினசரி 'குறித்த நேரத்தில் உணவுகள் தயார் செய்து வழங்கும் பணிக்கு திரு.M.சக்திவேல் ஒப்பந்ததாரர், எண்.26 C, மேலத்தெரு, சேராக்குப்பம், வடலூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி தினசரி பணிமேற்கொண்டு வருகிறார். மேற்படி, அன்னாரின் ஓராண்டு காலம் 24.08.2025ல் முடிவடைய உள்ளதால், தற்போது அன்னாருக்கு அதே விலை ரூ.12.65 பைசாவிகிதத்தில் மேலும், ஒராண்டிற்கு 25.08..2025 முதல் 24.08.2026 வரை கால நீட்டிப்பு செய்து வழங்குதல். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட ஆர்.சி துவக்கப்பள்ளி, சிதம்பரம் சாலை மற்றும் கலைமகள் சபா, காட்டுக்கொல்லை பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்கள் மொத்தம் 149 நபர்களுக்கும் கூடுதலாக உணகள் தயார் செய்து வழங்குதல் பணிக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)மேற்படி, பணியின்அவசரஅவசியம் கருதி நகரமன்ற தலைவரின் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம்அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1550/2025/இ1)**

**பொருள் எண்: 03**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்,, 05ல் கோவிந்தசாமி நகரில் மாட்டு சந்தை நகராட்சி மூலம் திரு.சின்னராசு த/பெ ராமசாமி அவர்களின் காலியிடத்தில் மாத வாடகை அடிப்படையில் நடத்தப்பட்டு வருகிறது. அதற்கான தரைவாடகையாக மாதம் ரூ.8000/– வீதம் ஜூலை 2025 முதல் டிசம்பர் 2025 வரை ரூ.48000/– திரு.சின்னராசு த0பெ ராமசாமி அவர்களுக்கு தரைவாடகையாக வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண்.03/2022/அ1.**

**பொருள் எண்: 04**

வடலூர் நகராட்சி அய்யன் ஏரி புணரமைக்கும் பணியில் நடைபாதை அமைக்கும் பணியினை நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் கள ஆய்வு செய்யப்பட்டதில் இடையூராக இருக்கும் இரண்டு மின்கம்பங்களை இடமாற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.779/2023/இ1, நாள்.28.04.2025ல் கடிதம் வைக்கப்பட்டதில் இளமின் பொறியாளர் , தமிழ்நாடு மின்சார வாரியம், வடலூர் நகராம் அவர்களின் 29.07.2025. நாளிட்ட பட்டியலில் கீழ்கண்ட விவரப்படி கட்டணம் ரூ.71520/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | கட்டண விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | Code No.47621 வைப்பு தொகை | ரூ. 60,610.00 |
| 2. | SGST | ரூ. 5454.90 |
| 3. | CGST | ரூ. 5454.90 |
| 4. | Rounding of | ரூ. 0.20 |
| | **மொத்தம்** | **ரூ. 71,520.00** |

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.779/2023/இ1)**

**பொருள் எண்: 05**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சிமெண்ட் சாலைகளில் தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையின் இயற்கை இடர்பாடுகள் மற்றும் குடிநீர் பகிர்மான் குழாய் பதிக்கும் பணிகளால் ஏற்படும் சிறு சிறு சாலை குழிகளை (Poth holes) உடனுக்குடன் சீரமைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி 01 முதல் 27 வார்டுகளுக்கும் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு. எண்.1207/2025/இ1)**

**பொருள் எண்:06**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தார்சாலைகளில் தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழையின் இயற்கை இடர்பாடுகள் மற்றும் குடிநீர் பகிர்மான் குழாய் பதிக்கும் பணிகளால் ஏற்படும் சிறு சிறு சாலை குழிகளை (Poth holes) உடனுக்குடன் சீரமைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி 01 முதல் 27 வார்டுகளுக்கும் மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு. எண்.1207/2025/இ1)**

**பொருள் எண்:07**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 27 வார்டுகளுக்கு 42 ஆழ்துளை கிணறுகள் மூலம் 26 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு நீர் ஏற்றப்பட்டு தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினசரி வழங்கப்படும் குடிநீரில் நோய் தொற்று ஏற்படாமல் தடுக்கும் வண்ணம் டேங் ஆப்ரேட்டர்கள் மூலம் நீர்ம குளோரின் (Eriction of Sodium hypo Cllorite Liguid) கலக்கப்பட்டு வருகிறது. மேலும், 3 மற்றும் 4 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தினசரி இரண்டு முறைக்கு மேல் நீர் ஏற்றி பல பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணியில் நீர்மகுளோரின் கலந்து பாதுகாப்பான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.**
**கோப்பு. எண்.1207/2025/இ1**

**பொருள் எண்:08**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, பண்ருட்டி சாலை ஓரத்தில் உள்ள பேருந்து நிலையத்தின் மேற்கு பகுதியில் பேவர் பிளாக் நடைபாதை, நகராட்சி அலுவலகத்திற்கு அருகிலுள்ள சாலைக்கு சிமென்ட் கான்கிரீட் மேற்பரப்பு மற்றும் மின்மாற்றி லைன், UG, LT கேபிள் ஒயர் அமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி, பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.18.20 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு எண். /2025/இ1)**

**பொருள் எண்:09**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவில் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இல்லங்களுக்கே சென்று நிவர்த்தி செய்ய உங்களுடன் ஸ்டாலின் முகாம் நகராட்சிகளில் நடைபெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1,2 மற்றும் 3 ஆகிய வார்டுகளுக்கு தமிழ்செல்வி திருமண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் 18.07.2025 (வெள்ளிக்கிழமை) நாளில் நடைபெற்றது. இம்முகாமில் வார்டு எண்.01, இராமமுர்த்தி ரெட்டியார் நகரில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குமாறு அப்பகுதி பொதுமக்களால் கோரிக்கை மனு அளிக்கப்பட்டதை ஆய்வு செய்யப்பட்டதில் அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய் பதிக்கப்படவில்லை என கண்டறியப்பட்டது. அதனை தொடர்ந்து நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர் மன்றத்தலைவர் ஆகியோரின் அறிவுறுத்தலின்படி மேற்படி பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 இலட்சம் நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு. எண்.1207/2025/இ1)**

**பொருள் எண்:10**

வடலூர் நகராட்சி அலுவலகத்தில் கோப்புகள் பாதுகாப்பாகவும், மற்றும் பிரிவு வாரியாக வரிசைப்படுத்தி அமைக்க பதிவறையில் (Record Room) அலமாரி அமைத்து தருமாறு பதிவறை எழுத்தர் அவர்களால் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி, பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**(கோப்பு எண். /2025/இ1)**

**பொருள் எண்:11**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, சந்தை மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து கும்பகோணம் சாலை வரை PVC 160 mm குடிநீர் விநியோகம் செய்யும்

பிரதான குழாய் பதித்து தருமாறு அப்பகுதி பொதுமக்களால் கோரப்பட்டதை தொடர்ந்து நகர் மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தலின்படி மேற்காணும், பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.40 இலட்சத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். /2025/இ1)**

**பொருள் எண்:12**

வடலூர் நகராட்சி நகர்மன்ற தலைவர், ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகனங்களுக்கு, காப்பீடு உரிமம் (Insurance) கடந்த 07.08.2025 அன்றுடன் முடிவடைந்துள்ளதால், காப்பீடு உரிமம் (Insurance) 2025 - 2026ம் ஆண்டிற்கு புதுப்பிக்க வேண்டி கோரப்பட்டதில் The New India Assurance Company Ltd, Neyveli – 1 நிறுவனத்தாரல் 14.08.2025 நாளிட்ட பட்டியலில் Bumper to Bumper என வகைப்படுத்தி காப்பீடு உரிமம் (Insurance) புதுபிக்க கீழ்கண்டவாறு கட்டணம் ரூ.1,03,178/- செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளதை நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வாகனங்களின் எண். | வாகனங்களின் பெயர் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1. | TN31 CE 8496 | Scorpio | ரூ.48326.00 |
| 2. | TN31 CE 8476 | Bolero | ரூ.27426.00 |
| 3. | TN31 CE 8412 | Bolero | ரூ.27426.00 |
| | | **மொத்தம்** | **ரூ.1,03,178.00** |

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1517/2025/இ1)**

**பொருள் எண்:13**

வடலூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் 2 எண்ணிக்கை MCC மற்றும் RCC 2 எண்ணிக்கை உள்ளது. அதில் 10 எண்ணிக்கை கொண்ட நபர்கள் நகர்மன்ற தீர்மானம் எண் 782-30.07.2025ம் தேதி முதல் டைமண்ட் ஆண்கள் சுய உதவி குழுக்கள் மூலமாக பணி செய்து கொண்டு வருகிறார்கள். பணிக்காலம் முடிவுற்ற நிலையில் (மதிப்பீடு ரூ.5.00 இலட்சம்) எனவே, 2025 - 2026 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித்தலைவரின் தினசரி சுலி அடிப்படையில் மீண்டும் ஒரு முறை பணியை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.384/2025/இ1).**

**பொருள் எண்:14**

வடலூர் நகராட்சி 19.93 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 27 வார்டுகளை உள்ளடக்கிய இந்நகராட்சியில் I & A திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி, KNMT மற்றும் NSMT சாலை பணிகள் SFC Incentive Fund நிதியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 6th CFC நிதியின் கீழ் OHT கட்டும் பணி 15th CFC நிதியின் கீழ் OHT கட்டும்பணி, மூலதன மானிய நிதி (CGF) மற்றும் SBM 2.0 நிதியின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, பணிகளை கண்காணிக்கவும் மற்றும் புதிய திட்டப்பணிகளுக்கு கருத்துரு (DPR) தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் சென்னை மற்றும் TUFIDCO அலுவலகம் சென்னை சென்று உரிய அனுமதி பெருதல், அன்றாடம் கேட்கப்படும் தரவுகள் அனுப்புதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இரண்டாம் நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணி அமைப்பின்படி ஒரு (1) பணி ஆய்வர் பணியிடம் காலியாக உள்ளதால் மேற்படி பணிகளை உரிய காலத்தில் செய்ய சிரமம் ஏற்படுகிறது. எனவே, மூன்று (3) தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 3 மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்,

**(கோப்பு எண்.1207/2025/இ1)**

**பொருள் எண்:15**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.23, சபை , வார்டு எண்.06, ஜெயப்பிரியா நகர், வார்டு எண்.09, ராகவேந்திரா சிட்டி, வார்டு எண்.15, இந்திரா நகர், வார்டு எண்.20, சந்தை, வார்டு எண்.03 மற்றும் 10 சேராக்குப்பம் பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கான அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் நீர் குழம்பலாக வருவதை ஏர் கம்பர்சர், காப்பர் கேபிள் கொண்டு சரிசெய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.60/- இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.804, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில்

கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.08% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (−) 0.16 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.16% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1172/2025/இ1)**

**பொருள் எண்:16**

வடலூர் நகராட்சி பொறியியல் பிரிவில் Computer Operater வெளிகொணர்வு முகமை மூலமாக ஒரு நபர் (1) மேற்கொள்ளும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.20/− இலட்சம் செலவினத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.798, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.27% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (−) 0.14 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.14% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1261/2025/இ1)**

**பொருள் எண்:17**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01, இராமமூர்த்தி ரெட்டியார் நகரில் குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.50/− இலட்சம் செலவினத்தினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.802, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)1.65% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (−) 0.44 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.44% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1207/2025/இ1)**

**பொருள் எண்:18**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20, எம்.கே.கே. நகர் மற்றும் வார்டு எண்.10, தங்கராசு நகர் சாலை விரிவாக்கம் ஆகிய தெருக்களில் உள்ள வடிகால்வாய் குறுக்கே RCC சிமெண்ட் குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00/− இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.802, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். | (−)0.12% குறைவு |
| 2 | ஸ்ரீ செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை | (+) 0.10 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−)0.12% குறைவாக கொடுத்துள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1171/2025/இ1)**

**பொருள் எண்:19**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.03, ஆபத்தாரணபுரம் கிழக்கு தெருவில் வடிகால்வாய் குறுக்கே RCC சிமெண்ட் குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.60/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.805, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.15% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (–) 0.06 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.06% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1173/2025/இ1)**

**பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வடகிழக்கு பருவமழை 2025, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பொது சுகாதாரம், பாதுகாப்புடன் குடிநீர் விநியோகம், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை அகற்றுதல், WMM நிரப்புதல், மரங்கள் அகற்றுதல், கால்வாய் தூர்வாருதல் மற்றும் மழைகாலங்களில் வெள்ள பாதிக்கப்படும் இடங்களிலிருந்து பொதுமக்களை முகாம்களில் தங்கவைக்கப்பட வேண்டும் போன்ற பணிகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற தேவையான ஆயில் இன்ஜின், PVC Pipe. மரம் அருக்கும் இயந்திரம் கொள்முதல் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல், மேல் நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றும் மின் உந்திகள் பழுதடையும் போது சரிசெய்யவும் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல் குடியிருப்புகளில் தேங்கும் மழைநீரை JCB மூலம் அகற்ற வாடகைக்கு அமர்த்துதல், முகாம் அடிப்படை வசதிகள் மற்றும் இதரப்பணிகள் போன்ற பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுரூ.10.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.806, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்துநாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.07% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (–) 0.05 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1262/2025/இ1)**

**பொருள் எண்: 21**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7,8,13,16,19,20,21 வார்டுகளில் நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையில் நான்கு முனை சந்திப்பிலிருந்து விக்கிரவாண்டி (VKT) சாலையின் இருபுறமும் மற்றும் விருத்தாச்சலம் கடலூர் ரோடு சாலையின் இருபுறமும் அமைந்துள்ள வாய்காலை தூர்வாருதல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுரூ.5.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.807, நாள்.30.07.2025 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.17% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (–) 0.19 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.19% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1263/2025/இ1)**

**பொருள் எண்: 22**

வடலூர் நகராட்சி அலுவலகத்தில் கோப்புகள் பாதுகாப்பாகவும், மற்றும் பிரிவு வாரியாக வரிசைப்படுத்தி அமைக்க பதிவறையில் (Record Room) அலமாரி அமைக்கும் பணிகளுக்கு

தயாரிக்கப்பட்ட மதிப்பீடுரூ.4.00/– இலட்சம் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)0.97% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (–) 0.08 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.08% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1261/2025/இ1)**

**பொருள் எண்: 23**

இந்நகராட்சியில் வார்டு எண்.20, சந்தை மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து கும்பகோணம் சாலை வரை PVC 160 mm குடிநீர் விநியோகம் செய்யும் பிரதான குழாய் பதித்தல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.40 இலட்சம் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (–)0.79% குறைவு |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (+)1.60% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.79% குறைவாக கொடுத்துள்ள திரு. சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண். 1261/2025/இ1)**

**பொருள் எண்: 24**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19, பண்ருட்டி சாலை ஓரத்தில் உள்ள பேருந்து நிலையத்தின் பேவர் பிளாக் நடைபாதை, நகராட்சி அலுவலகத்திற்கு அருகிலுள்ள சாலைக்கு சிமெண்ட் கான்கிரீட் மேற்பரப்பு மற்றும் மின்மாற்றி லைன், UG, LT கேபிள் ஒயர் அமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி, பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.18.20 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நாள்.20.08.2025ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு.சுப்ரமணி, ஒப்பந்ததாரர், குறிஞ்சிப்பாடி. | (+)9.00% அதிகம் |
| 2 | திரு.A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர். | (–) 0.08 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு :** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.08% குறைவாக கொடுத்துள்ள A.ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

**(கோப்பு எண்.1207/2025/இ1)**

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி**

**வடலூர் நகராட்சி**
**மன்றக் கூட்ட அழைப்பிதழ்**
*****************

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26.08.2025. செவ்வாய்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.